# மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் 2023-2024

**1. சேலம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 2 புதிய வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்படும்.**

சேலம் மாவட்டம் ஓமலூர் சரகத்தில் கொளத்தூர் மற்றும் மேட்டூர் வட்டாரத்திற்குட்பட்ட கொளத்தூர், லக்கம்பட்டி, சிங்கிரிப்பட்டி, தின்னப்பட்டி, ஆலமரத்துப்பட்டி, மூலக்காடு, சாம்பள்ளி, கருங்கல்லூர், காவேரிபுரம், கண்ணாமூச்சி, பாலமலை, நவப்பட்டி, கோல்நாயக்கன்பட்டி ஆகிய வருவாய் கிராமங்களை உள்ளடக்கி கொளத்தூரில் புதிதாக ஒரு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்படும்

அதேபோல, புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுக்கோட்டை,குன்னாண்டார்கோவில், கந்தர்வக்கோட்டை, அன்னவாசல், விராலிமலை ஆகிய வருவாய் கிராமங்களை உள்ளடக்கி புதுக்கோட்டையில் புதிதாக ஒரு வேளாண்

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அமைக்கப்படும்.

மேற்கூறிய 2 புதிய வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு **ரூ.5.00 கோடி** மதிப்பீட்டில் கிடங்கு, உலர் களம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

**2. மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக புதிதாக 9 மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கப்படும் .**

தமிழ்நாட்டில் தற்போது 25 மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பழங்குடி மக்களின் நலனை முன்னிட்டு தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் பெட்டமுகிலாளம் கிராமம், சேலம் மாவட்டம் பாலமடை மற்றும் வாழவேந்தி கிராமங்கள், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைகட்டி மற்றும் அத்திக்கடவு கிராமங்கள், திருவண்ணாமலை மாவட்டம் பீமன்பட்டி கிராமம் கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை கிராமம், திருநெல்வேலி மாவட்டம் காணிக்குடியிருப்பு மற்றும் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி ஆகிய பகுதிகளில்

9 புதிய மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் 9 மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு, **ரூ.4.50 கோடி** மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

**3. ஐந்து இதர வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்படும்.**

ஈரோடு மாவட்டம் பர்கூர், தேனி மாவட்டம் கொட்டகுடி, சேலம் மாவட்டம் கம்மாளப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கோயம்புத்தூர் மாவட்டம் தூணக்கடவில் உள்ள விற்பனைச் சங்கம், விருதுநகர் மாவட்டம் செண்பகத்தோப்பில் உள்ள தனி வகைச் சங்கம் ஆகிய 5 கூட்டுறவுச் சங்கங்கள் அந்தப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மற்றும் பழங்குடியினர் நலன் கருதி மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றப்படும்.

**4. வேலூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய கிளை துவங்கப்படும்.**

வேலூர் மாவட்டம் பீஞ்சமந்தையில் செயல்பட்டு வரும் மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு பாலம்பட்டு பகுதியில் புதிய கிளை ஒன்று ஏற்படுத்தப்படும்.

அதேபோல சேலம் மாவட்டத்தில் ஏற்காடு ஒன்றியம் வாழவேந்தி கிராமத்தில் புதிதாக துவங்கப்படவுள்ள மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு மாரமங்கலம் பகுதியில் புதிய கிளை துவங்கப்படும்.

இந்த 2 புதிய கிளைகளுக்கான கட்டிடம் **ரூ.50.00 இலட்சம்** மதிப்பீட்டில் கட்டப்படும்.

**5. மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5% என்கிற குறைந்த வட்டியில் தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியே கடனுதவி வழங்கும்.**

மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 5% என்கிற குறைந்த வட்டியில் தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி கடனுதவி வழங்கும். இதனால் மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமை செயல்திறன் மேம்படும்.

**6. நீலகிரி மாவட்டத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் பந்தலூர் மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படும்**

நீலகிரி மாவட்டத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் பந்தலூர் மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்படும்.

**7. சேலம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 2 மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள் நவீனமயமாக்கப்படும்.**

சேலம் மாவட்டம் சின்னகல்ராயன் மற்றும் திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி ஆகிய பகுதிகளில் உள்ள 2 மலைவாழ்மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்

**8. பழுதடைந்த நிலையில் உள்ள 11 மழைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்களுக்கு பதிலாக புதிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்படும்.**

சேலம் மாவட்டம் ஏற்காடு, பச்சைமலை, பெரிய கல்ராயன், தருமபுரி மாவட்டம் சிட்லிங், திருச்சி மாவட்டம் பச்சமலை, திருவண்ணாமலை மாவட்டம் நம்மியம்பட்டு, கள்ளக்குறிச்சி மாவட்டம் வெள்ளிமலை, கிளாக்காடு, மோட்டாம்பட்டி, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம், நீலகிரி மாவட்டம் மசினகுடி ஆகிய 11 மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கக் கட்டிடங்கள் கட்டப்பட்டு 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆனதாலும், தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் இவற்றிற்கு ரூ.4.61 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

**9. இராமநாதபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் புதிதாக இரண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் துவங்கப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் R.S மங்களம் வட்டாரத்தில் உள்ள செவ்வாய்பேட்டை கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு செவ்வாய்பேட்டை கிராமத்தில் புதிதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்கப்படும்.

அதேபோல பெரம்பலூர் மாவட்டம், தேவையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தினைப் பிரித்து புதிதாக மேட்டுப்பாளையம் பகுதியில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் துவங்கப்படும்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் இரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் தலா

ரூ.25.00 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

**10. கூட்டுறவுச் சங்கங்களில் வசூல் ஆகாமல் நிலுவையிலுள்ள தவணை தவறிய பண்ணை சாராக் கடன்கள் மற்றும் இதர நீண்டகால நிலுவை இனங்களுக்கு சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

தமிழகத்திலுள்ள 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 4,453 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 116 நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள், 128 நகரக் கூட்டுறவு வங்கிகள், 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் மூலம் பல்வேறு வகையான பண்ணை சாராக் கடன்கள் வழங்கப்பட்டு வந்தன. மற்றும் 112 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வியாபாரிகள் செலுத்த வேண்டிய தொகைக்கு ஈடாக விவசாயிகளுக்கு விவசாய

விளைப்பொருட்களுக்கு உரிய தொகை வழங்கி வருகின்றன.,

கூட்டுறவுச் சங்கங்களில் மற்றும் வங்கிகளில் அவற்றின் நிதி நிலையை பலப்படுத்தவும், செயல்படாத சொத்துகளின் சதவீதத்தை குறைத்திடவும், நீண்ட காலமாக வசூலாகாமல் நிலுவையாக இருந்த கடன்களையும், இதர நிலுவை இனங்களையும் தீர்வு செய்யும் பொருட்டு, ஒரு சிறப்பு கடன் தீர்வுத் திட்டம் கொண்டு வரப்படும்.

இதன் மூலம் 3,18,571 நபர்கள் பயனடைவார்கள்.

**இந்தத் திட்டத்தின் மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு தோராயமாக ரூ.1,335.51 கோடி திரும்ப கிடைக்கும்.** மற்றும் தொடர்புடைய சங்கங்களின் நிதி நிலைமையும் மேம்படும்.

**11. கூட்டுறவு வங்கிகளின் மூலம் வீட்டு மனை வாங்க கடனுதவி வழங்கப்படும்.**

நகர மயமாக்குதல் விரைவாக நடைபெற்று வரும் நிலையில், நடுத்தர ஏழை, எளிய குடும்பத்தினருக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனை வாங்கும் புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலமாக மாதாந்திர ஊதியம் பெறும் பிரிவினர் பயன்பெறுவர். மற்ற வங்கிகளை விடக் குறைந்த வட்டிவிகிதத்தில் கடன் வழங்கப்படும்.

**12. கூட்டுறவு வங்கிகளின் மூலம் நாட்டுப்புறக் கலைஞர்கள், பாரம்பரிய இசைக்கருவி மற்றும் பாரம்பரிய கலைப்பொருட்கள் தயாரிக்கும் பணியில் உள்ளவர்களுக்கு சிறப்புக் கடனுதவி வழங்கப்படும்.**

நலிந்துவரும் நாட்டுப்புறக் கலைகளை மீட்டெடுக்கும் வகையில் நாட்டுப்புறக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், பாரம்பரிய தமிழ் மரபுக் கலைகளை பேணிப்பாதுகாக்கும் பொருட்டும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கும், பாரம்பரிய இசைக் கருவிகள் மற்றும் கலைப் பொருட்கள் தயாரிக்கும் கலைஞர்கள், சிற்பிகள், ஓவியர்கள் உள்ளிட்டவர்களுக்கு 5% வட்டியில் கடன் வழங்கப்படும்.

**13. கூட்டுறவு வங்கிகளின் மூலம் மூத்த குடிமக்களுக்கு மறு அடமானக் கடன் வழங்கப்படும்.**

60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய மூத்த குடிமக்கள் அவர்கள் வசிக்கும் வீட்டின் சட்டப்பூர்வ உரிமையாளராக இருப்பின், அவ்வீட்டிற்கு ஈடாக கூட்டுறவு வங்கிகளின் மூலம் மறு அடமானக் கடன் வழங்கப்படும். வயது முதிர்ந்த காலத்தில் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவில்லாத நிலையில், அவர்கள் சுயமரியாதையுடன் வாழ்வதற்கும், எதிர்பாரா மருத்துவச் செலவினங்களை மேற்கொள்ளுவதற்கும், அவர்களின் இதர அத்தியாவசியத் தேவைகளுக்கும் இக்கடன் பயன்படும்.

**14. கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வாகனம் வாங்கக் கடன் வழங்கப்படும்.**

ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் நான்கு சக்கர மற்றும் இருசக்கர வாகனம் வாங்கிட மற்ற வங்கிகளை விடக் குறைந்த வட்டிவிகிதத்தில் கடன் வழங்கப்படும். வாகனத்தின் விலையில் 90% கடனாக வழங்கப்படும்.

**15. கூட்டுறவு வங்கிகளின் மூலம் ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வதியதாரர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட கடன் வழங்கப்படும்.**

ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கிட மற்ற வங்கிகளை விடக் குறைந்த வட்டிவிகிதத்தில் கடன் வழங்கப்படும்

**16. கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினரின் வயது உச்சவரம்பு 60-லிருந்து 70 ஆக உயர்த்தப்படும்.**

கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்களின் தற்போதைய வயது வரம்பு 60 லிருந்து 70 ஆக உயர்த்தப்படுகிறது.

**17. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ஆகியவற்றை நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தில் உறுப்பினர்களாக இணைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் 1,715 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மற்றும் 116 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் செயல்பாடுகளை கண்காணிக்கவும் அவற்றினை மேம்படுத்தவும் தமிழ்நாடு கூட்டுறவு நகர வங்கிகளின் இணையத்தின் கீழ் கொண்டு வரப்படும்.

**18. மத்தியக் கூட்டுறவு வங்கி உதவிப் பொது மேலாளர்களுக்கு பொதுப்பணி நிலைத்திறன் நடைமுறைப்படுத்தப்படும்.**

மத்தியக் கூட்டுறவு வங்கிப் பொதுமேலாளர்களுக்கான பொதுப்பணிநிலைத்திறன் அமைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதேபோன்று, தற்போது மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் உதவிப் பொதுமேலாளர்களும் பொதுப்பணி நிலைத் திறன் அமைப்பின் கீழ் கொண்டுவரப்படுவர்.

**19. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் செயலாளர் பணியிடத்திற்கான நுழைவுப் பணியிடங்களையும் பொதுப்பணி நிலைத்திறன் கீழ் கொண்டுவரப்படும்.**

தமிழ்நாட்டில் செயல்படும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ஏற்படும் முறைகேடுகளைத் தடுக்கவும், திறமையான பணியாளர்களை பணியமர்த்துவதன் மூலம் அனைத்து சங்கங்களும் சிறப்பாக செயல்படுவதற்கு ஏதுவாகவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க செயலாளர்களுக்கான பொதுப்பணி நிலைத்திறன் அமைப்பு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

தற்போது பொதுப்பணி நிலைத்திறன் அமைப்பினை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பணியாற்றும் உதவி செயலாளர், முதுநிலை எழுத்தர் மற்றும் எழுத்தர் போன்ற செயலாளர் பணியிடத்திற்கான நுழைவுப்

பணியிடங்களும் பொதுப் பணிநிலைத்திறன் கீழ் கொண்டு வரப்படும்.

**20. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களில் பணிபுரியும் செயலாளர்களுக்கான பணியிடங்கள் பொது பணிநிலைத்திறன் கீழ் கொண்டு வரப்படும்.**

பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களில் முறைகேடுகள் நிகழ்வதைத் தடுக்கவும், மாநிலத்திலுள்ள அனைத்து சங்கங்களும் செம்மையாகச் செயல்பட ஏதுவாக, அச்சங்கங்களில் திறமையான ஊழியர்கள் பணிபுரிவதை உறுதிசெய்யவும், பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்களின் செயலாளர்களுக்கான பணியிடங்களை பொதுப்பணி நிலைத்திறன் கீழ் கொண்டு வரப்படும்.

**21. தருமபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தனிநபர் பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைக்கப்படும்.**

தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையத்தில் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக வாடிக்கையாளர் பாதுகாப்புப் பெட்டகம் அமைக்கப்படும்.

திருநெல்வேலி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் வள்ளியூர், பேட்டை, கடையம், வாசுதேவநல்லூர், சிவகிரி மற்றும் கே.டி.சி நகர் கிளைகளில் தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்புப் பெட்டகங்கள் அமைக்கப்படும்.

**22. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் ஒரு பல்நோக்கு சிற்றரங்கம் கட்டப்படும்.**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பல்நோக்கு சிற்றரங்கம் கட்டப்படும்.

**23. திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உற்பத்தி அலகு, கூடுதல் அரவை அலகு மற்றும் எடைமேடை ஆகிய கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்.**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் தேங்காய் எண்ணெய் சோப் தயாரிக்கும் அலகு அமைக்கப்படும்.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மல்லசமுத்திரம் கிளையில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வேப்பம் பிண்ணாக்கு அரவை அலகு அமைக்கப்படும்.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின், கொங்கணாபுரம்

கிளையில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவில் எடை மேடை அமைக்கப்படும்.

**24. தருமபுரி மாவட்டம் அரூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஆகிய வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உலர்களம் மற்றும் அரவை அலகு அமைக்கப்படும்.**

தருமபுரி மாவட்டம் அரூர் வேளாண் கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனைச் சங்கத்தில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் உலர்களம் அமைத்து சங்கத்தின் கட்டிடத்தில் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டில் மல்லித்தூள் அரவை அலகு அமைக்கப்படும்.

**25. இராமநாதபுரம் மாவட்டத்திற்கென தனி மாவட்டக் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம் துவங்கப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டத்திற்கென தனியே கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் துவங்கப்படும்.

**26. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையக் கட்டிடங்களைப் பழுதுபார்த்து அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு நவீனமயமாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் 22 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் கணினி வகுப்பறைகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.

மேலும், சொந்த கட்டிடங்களில் இயங்கி வரும் 13 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் பழுது பார்க்கும் மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தஞ்சை சாமியப்பா கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டப்படும்.

தற்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் நாகர்கோயில் மற்றும் சாத்தூர் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களுக்கு ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டப்படும்.

**27. மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்படும்.**

மயிலாடுதுறை மாவட்டத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்படும்.

**28. மதுரை மாவட்டம் பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும் மற்றும் கிடங்குகள் நவீனமயமாக்கப்படும்.**

மதுரை மாவட்டம் பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் உற்பத்தியை அதிகப்படுத்தும் விதமாக பண்டகசாலைக்குச் சொந்தமான அழகப்பன் நகர் மற்றும் எல்லீஸ் நகரில் உள்ள காலி இடங்களில் முறையே ரூ.23.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு செக்கு ஆலையும் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் ஒரு வறுகடலை தயாரிப்பு அலகும் அமைக்கப்படும்.

மதுரை மாவட்டம் பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் தலைமை அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள மூன்று கிடங்குகள் ரூ.47.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

**இதற்கான மொத்த செலவினம் ரூ.2.20 கோடி ஆகும்.**

**29. கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையில் உள்ள 4 கிடங்குகள் பழுதுபார்த்து புதுப்பிக்கப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்குச் சொந்தமான 32,000 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள நான்கு கிடங்குகளும் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புதுப்பிக்கப்படும்.

**30. நாகப்பட்டினம் பிரதம கூட்டுறவுப் பண்டகசாலை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையாக தரம் உயர்த்தப்படும்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் நாகப்பட்டினம் பொதுப்பணியாளர்கள் பிரதம கூட்டுறவுப் பண்டகசாலை நாகப்பட்டினம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையாக தரம் உயர்த்தப்படும்.

**31. திருவாரூர் மாவட்டம் பாமணியில் துத்தநாக சல்பேட் அலகு அமைக்கப்படும்.**

துத்தநாகம், தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் இன்றியமையாத நுண்ணூட்டச் சத்து ஆகும். தமிழ்நாட்டில் 40-50% மண்ணில் துத்தநாகச் சத்து குறைவாக இருப்பதால் பயிர் உற்பத்தித்திறன் மற்றும் ஊட்டச்சத்து மதிப்பு குறைகிறது.

தமிழ்நாட்டில் இதற்கான தேவை அதிகமாக உள்ளதால் திருவாரூர் மாவட்டம், பாமணி கிராமத்தில் துத்தநாக சல்பேட் உற்பத்தி அலகு ஒன்று ரூ. 5.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**32. திருவாரூர் மாவட்டம் பாமணி மற்றும் திண்டுக்கல் மாவட்டம் எரியோடு ஆகிய இடங்களில் இரண்டு மண்புழு உர உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும்**

மண்புழு உரம் தயாரிக்க, திருவாரூர் மாவட்டம் பாமணி மற்றும் திண்டுக்கல் மாவட்டம் எரியோடு ஆகிய இடங்களில் தலா ரூ.1.40 கோடி வீதம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் 2 உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும்.

**33. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம் கடநாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் நியாயவிலைக் கடை மற்றும் கிடங்குடன் கூடிய புதிய அலுவலகக் கட்டிடம் கட்டப்படும்.**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டம் கடநாடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ரூ.78.00 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கடை மற்றும் கிடங்குடன் கூடிய புதிய அலுவலகக் கட்டிடம் கட்டப்படும்.

**34. கூட்டுறவு நகர வங்கி, நாணய வங்கி மற்றும் உழவர் பணி கூட்டுறவுக் கடன் சங்கங்களின் கட்டிடங்களை பழுதுபார்த்து, நவீனமயமாக்கப்படும்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பீப்பிள்ஸ் கூட்டுறவு நகர வங்கி கட்டிடம் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பூபதிராஜா கூட்டுறவு நாணய வங்கி கட்டிடம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் பழுது நீக்கப்பட்டு புதுப்பிக்கப்படும்.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்புவனம் உழவர் பணி கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டிடம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்.

**35. தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு ஐந்து புதிய கிளைகள் துவங்கப்படும்.**

தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் புதிய கிளைகள் கொருக்குப்பேட்டை, அம்பத்தூர், குன்றத்தூர், தாம்பரம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் துவங்கப்படும்.

**36. விருதுநகர், நாமக்கல், சேலம், திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.**

விருதுநகர், நாமக்கல், சேலம், திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள 33 கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

**37. திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிறுமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் புதிய உலர்களம் அமைக்கப்படும்.**

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள சிறுமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு உலர்களம் அமைக்கப்படும்.

**38. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு இரண்டு புதிய கிளைகள் துவங்கப்படும்.**

தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு தாம்பரம் கிழக்கு மற்றும் சைதாப்பேட்டை பகுதிகளில் 2 புதிய கிளைகள் துவங்கப்படும்.

**39. கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 1,500 நியாயவிலைக் கடைகள் பொலிவூட்டப்படும்.**

கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் 1,500 நியாயவிலைக்கடைகள் பொலிவூட்டப்படும்.

**40. கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 5,000 நியாய விலைக் கடைகளில் ISO 9001 தரச்சான்றிதழ் பெறப்படும்.**

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் முழுமையான தர மேலாண்மையினை உறுதி செய்யும் பொருட்டு 5,000 நியாயவிலைக் கடைகளின் தரத்தினை மேம்படுத்தி தர மேலாண்மை தொடர்பான ISO 9001 தரச்சான்றிதழ் பெறப்படும்.

**41. தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் அலகுகளுக்கு ISO 9001 தரச்சான்றிதழ் பெறப்படும்.**

தமிழ்நாடு முழுவதும் செயல்படும் 40 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், 300 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் அலகுகளான 54 பெட்ரோல் பங்குகள், 26 எரிவாயு உருளை விற்பனை நிலையங்கள், 380 கூட்டுறவு மருந்தகங்கள், 113 வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் 25 கூட்டுறவு அச்சகங்கள் ஆகியவற்றின் தரத்தினை மேம்படுத்தி ISO 9001 தரச்சான்றிதழ் பெறப்படும்.

**42. திருவள்ளூர் மாவட்டம் திரூரில் ஒரு கூட்டுறவு அருங்காட்சியகம் அமைக்கப்படும்.**

இந்தியாவிலேயே முதல் கூட்டுறவுக் கடன் சங்கம் 1904-ஆம் ஆண்டு இன்றைய திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திரூரில் தோற்றுவிக்கப்பட்டது.

திரூரில் கூட்டுறவுக் கடன் சங்கக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு, அதனருகே ஒரு கூட்டுறவு அருங்காட்சியகம் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**43. நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் 2,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றப்படும்.**

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் 2,000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பல்நோக்கு சேவை மையங்களாக மாற்றப்படும்.

**44. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டம், செம்மாண்டம்பாளையத்திலுள்ள பழுதடைந்த நியாய விலைக் கடைக்கு பதிலாக புதிய நியாய விலைக் கடை கட்டிடம் கட்டப்படும்.**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், காரிங்கராயன்பாளையம் பகுதி செம்மாண்டம் பாளையத்திலுள்ள பழுதடைந்த நியாய விலைக் கடைக்கு பதிலாக ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடை கட்டிடம் கட்டப்படும்.